
Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita


ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஸ்ரீ சிருங்கேரீ சாரதாபீடம் மஹாசந்நிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் அருளுரை

தனக்கு நல்லதெது என்பதைத் தெரிந்துகொள்ள மனிதன் எப்பொழுதும் ஆவலுடன் இருக்கவேண்டும். அவனுக்கு ச்ரேயோ மார்க்கத்தை எடுத்துக்கூற சாஸ்த்ரங்கள், இதிஹாஸ புராணங்கள் எல்லாம் இருக்கின்றன. இக்காலத்தில் அவற்றைத் தானாகவே படித்துத் தெரிந்துகொள்வது அவ்வளவு எளிதல்ல. நேரமும் கிடைப்பதில்லை, ஆகையால் பெரியோர்களிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாக சாஸ்த்ரத்திலுள்ள ஸூக்ஷ்ம விஷயங்களைத் தெரிந்து கொள்வதுதான் நல்லது.

தீவிரமான கடவுள் நம்பிக்கை இருந்தால் விரையில் கடவுளே அவனுக்கு ஞான குருவாக வந்து ச்ரேயோ மார்க்கத்தை அருளுவார். அப்பொழுது அவன் உலகத்தை ஒரு கனவு போல் உணர ஆரம்பித்துவிடுவான். கர்மாக்கள், அதன் பலன்கள், அவற்றை அனுபவிப்பதற்கான புனர்ஜன்மங்கள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு விடுவான். குரு மூலமாக ஸூக்ஷ்மமான வேதாந்த விஷயங்களை படிப்படியாக அவனால் அனுபவத்திற்குக் கொண்டுவர முடியும். ஆனால், அதுபோன்ற ஜிஞாஸு (அறிந்துகொள்ள ஆவலுள்ளவன் முதலில் தன்னை குருவின் அனுக்ரஹத்திற்கு பாத்திரமாக்கிக் கொள்ள வேண்டும்.

உதாரணமாக ஸூரிய கிரணத்தால் நிஜமான தாமரை மொட்டுத்தான் விகஸிக்கும். கட்டை அல்லது கல்லானான தாமரை மொட்டல்ல. அதேபோல் தீவிரமான குருபக்தியால் குருஸேவை செய்து வந்து குருவின் அனுக்ரஹத்திற்கு பாத்திரமானவனில் தான் ஆத்மபோதம் உதயமாகும் அனுபவத்திற்கும் வரும்.




ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

यद्यभ्युदयने पानोर्यया पद्मम् प्रकाशते । न काशन्ते तथा पद्मा: काष्टपाषाणामृण्मया: ॥
प्रकाशको रविर्यद्वत्पद्ममेव विकासयेत् । गुरुस्तथा बोधक: सच्छिश्यमेव प्रबोधयेत् ॥

யத்³யப்⁴யுத³யனே பானோர்யயா பத்³மம் ப்ரகாஶதே .
ந காஶந்தே ததா² பத்³மா: காஷ்டபாஷாணாம்ரு’ண்மயா: ..
ப்ரகாஶகோ ரவிர்யத்³வத்பத்³மமேவ விகாஸயேத் .
கு³ருஸ்ததா² போ³த⁴க: ஸச்சி²ஶ்யமேவ ப்ரபோ³த⁴யேத் ..

இதை நன்றாகப் புரிந்துகொண்டு குருவின் அனுக்ரஹத்திற்கு பாத்திரராக வேண்டுமென்று எல்லோரையும் ஆசீர்வதிக்கிறோம்.

ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளின் அருளுரைகள்

மனிதன் எப்பொழுதும் உயர்ந்த எண்ணங்களைத்தான் மனதில் கொள்ள வேண்டும். தீங்கு எண்ணத்தை ஒருபொழுதும் அவன் வைத்திருக்கக்கூடாது. மற்றவர்களுக்கு துன்பம் கொடுப்பவன் கடைசியில் தனக்கே ஆபத்தை வலவழைத்துக் கொள்வான். ராமாயணத்தில் ராவணனின் செயல்களில் இது தெளிவாக வெளிப்படுகிறது. அவன் ஸ்ரீராமரின் தர்மபத்னி சீதையை அபகரித்து இலங்கையில் சிறை வைத்தான். ராமதூதர் ஹனுமான் இலங்கைக்குச் சென்று ராவணனிடம் சீதையை ராமரிடம் திருப்பி சேர்ப்பதுதான் அவனுக்கு நன்மை என்று சொன்னார்.

அதைக் கேட்காமல் ராவணன் தனக்கு புத்திமதி சொன்ன ஹனுமானுக்கே தீங்கு நினைத்து நெருப்பு வைத்தான். அந்த தீ ஹனுமானுக்கு ஒரு கெடுதலும் செய்யாமல் இலங்கையை எரித்து. ஆதலால் மற்றவர்களுக்கு கெடுதல் இழைக்கக்கூடாது. தீங்கு இழைத்தவர்களிடம் கூட சங்கர பகவத்பாதர் பொறுமை காட்டினார். இது மஹான்களின் அடையாளம். பகவான் கீதையில் மற்றவர்களின் மனதில் பயம் உண்டாவதற்கு இடம் கொடுக்காதவன் எவனோ, அவன் எனக்குப் பிரியமானவன. இத்தகைய மனிதன் எவனாக இருக்கக்கூடும்? அவன் மற்றவர்களுக்கு தீங்கு நேருவதை விரும்பாதவனாகவே இருப்பான். இப்படிப்பட்ட மனிதன் மட்டுமே பகவானின் உண்மை பக்தனாக முடியும்.

மகாபாரதத்திலும் துரியோதனன் யுதிஷ்டிரனுக்கு கெடுதல் செய்யும் முயற்சியில் தனக்கே அழிவை வரவழைத்துக் கொள்வதை நாம் பார்க்கிறோம்.

ஆதலால், ஒவ்வொருவரும் இதை நன்றாக புரிந்துகொண்டு ஒருபொழுதும் மற்றவர்களுக்கு தீங்கு இழைக்க நினைக்காமல் உபகாரம் செய்யும் குணத்தை வளர்க்க வேண்டும்.

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் திவ்ய சரித்திரம்

7. ஞான நிலை

ஸ்ரீஸ்வாமிகளவர்கள் சிலவருஷகாலம் பாஹ்யபூஜாதி ஸகல வியாபாரங்களையும் விட்டு கேவலம் ஞானாப்பியாஸத்திலேயே ஊக்கம் கொண்டார்கள். நதி தீரத்திலும் மணல் திட்டுகளிலும் கற்பாறைகளிலும் தியானத்திற்கு உட்கார்ந்துவிடுவார்கள். நரஸிம்ஹ வனத்தையும் விட ஏகாந்த ஸ்தலம் வேண்டுமென்று சில ஸமயங்களில் ஸமீபத்திலுள்ள நரஸிம்ஹ பர்வதத்தில் போய் பர்ணசாலையில் பூஜாதிகள் செய்து கொண்டு பர்வதத்தின்மேல் இரண்டு மூன்று மைல் ஸஞ்சரித்து ஏகாந்த பிரதேசத்தில் ஞான நிஷ்டையிலிருந்துவிடுவார்கள். ஆத்ம ஞானிக்கு யாரிடமும் பயம் கிடையாது. யாருக்கும் இவரிடமிருந்து பயம் கிடையாது என்கிற லக்ஷணப்பிரகாரம் இவர் இருந்து வந்தார். துஷ்ட மிருகங்கள் கிட்ட வராது. வந்தாலும் தன் துஷ்டத் தனத்தை மறந்தேயிருக்கும். நரஸிம்ஹ பர்வதத்தில் ஒருநாள் அஸ்தமித்து ஸ்ரீமத் ஆசார்யார் சந்திரமௌலீசுவரர் பூஜை செய்து கொண்டிருக்கும் ஸமயம் இரண்டு புலிகள் வந்தன. பாராக்காரர்கள் தன் கைகளில் துப்பாக்கி இருப்பதைக்கூட மறந்து ஓடிப்போய் பர்ணசாலைக்குப் பின் பதுங்கிக்கொண்டார்கள். வந்த புலிகள் தூரவிருந்து பூஜை முடிந்து தீபாராதனையாகும் வரையில் பார்த்துக்கொண்டிருந்து விட்டு அப்புறம் தானாகவே போய்விட்டன.

ஒரு ஸமயம் ஸ்ரீமத் ஆசார்யார் ஒரு மரத்தடியில் பீடப்பலகையில் உட்கார்ந்து கொண்டு பேசிக்கொண்டிருக்கும் போது தன் முன்னாலிருந்த சிஷ்யர்கள் தான் சொல்வதை கவனிக்கவில்லை யென்று தெரிந்து காரணம் கேட்கையில் பீடப்பலகைக்கு அடியில் ஒரு ஸர்ப்பம் மண்டலமிட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிந்துகொண்டார்கள். அது அந்த விடத்தைவிட்டுப்

போனாலொழிய சிஷ்யர்களுக்கு ஸமாதானமாகா தென்று தெரிந்து, அப்பலகையை விட்டு எழுந்திருக்காமல் ஒரு பக்கமாக நகர்ந்து கொண்டு மற்றொரு பக்கத்தை இடது கையால் பிடித்துக்கொண்டு தூக்கினார்கள். பலகைக்கு அடியில் கையைக் கொண்டுபோகிறார்களே என்று சிஷ்யர்கள் பயப்பட்டார்கள். ஆனால் அந்த ஸர்ப்பம் மெதுவாக மண்டலத்தைப் பிரித்துக்கொண்டு அப்புறம் போய்விட்டது. யோக சாஸ்திரத்தில் சொல்லிய அஹிம்ஸா நிஷ்டை இவர்களிடம் நன்கு இருந்ததால் ஸகல பிராணிகளும் இவர்களிடம் மித்திரபாவத்தையடைந்திருந்தன. இவர்கள் நடந்துபோகும்போது காட்டில் ஏதேனும் ஸர்ப்பம் காலடி சப்தம் கேட்டு வேகமாய்ப் போகவாரம்பித்தால் "மெள்ள, மெள்ள" என்று சொல்வார்கள். அதன்பேரில் அந்த ஸர்ப்பம் வேகத்தைக் குறைத்துக் கொண்டு மெதுவாக நிதானமாகப் போகும். இவ்விதம் துஷ்ட ஜந்துக்களிடத்திலேயே இவர்களுக்கு மைத்ரீ இருக்குமானால் மனுஷ்யர்களிடத்தில் இருந்ததென்று சொல்லவும் வேண்டுமோ?

யாரேனும் ஒருவர் தன் துக்கத்தை ஸ்ரீஸ்வாமிகளவர்களிடம் தெரிவித்தால் அந்த சமயம் அவர்கள் முகத்திலும் அந்த துக்கம் பிரதிபலிக்கும். அப்படியே பிரபஞ்ச ஞானமேயில்லாத சிறுவர்களிடமும் அவர்களுக்குத் தகுந்தபடி ஸம்பாஷணை செய்து ஸந்தோஷப்படுத்துவார்கள். இந்தியாவிலுள்ள மஹாராஜாக்கள் அநேகர் தர்சனத்திற்கு வந்திருக்கிறார்கள். வித்வான்களும், பாமரர்களும் வந்திருக்கிறார்கள். திரவ்யத்தை அபேக்ஷிக்கிறவர்களும், திரவ்யத்தை அர்ப்பணம் செய்ய நினைப்பவர்களும் வந்திருக்கிறார்கள். துக்கமடைந்தவர்களும், ஸந்தோஷப்பட்டவர்களும் வந்திருக்கிறார்கள். கிறிஸ்துவர்களும், மஹமதியர்களும், சூத்திரர்களும், பிராஹ்மணர்களும் வந்திருக்கிறார்கள். இவ்விதமாக இவர் ஜீவிய காலத்தில் அநேக லக்ஷம் ஜனங்கள் தர்சனம் செய்திருப்பார்கள். ஒவ்வொருவரும் ஸ்ரீமத் ஆசார்யாருக்கு தன்னிடமுள்ள ப்ரீதியும் அனுக்ரஹமும் மற்ற யாரிடத்திலும் கிடையாதென்றே சொல்வார்கள். இவ்விதமாக எல்லாரிடத்திலும் ஒரே ரீதியாக மனோபாவத்தைக் காட்டமுடிய வேண்டுமானால் இவர் ஸர்வாத்மபாவமடைந்த ஜீவன்முக்தரென்று சொல்வதில் என்ன தடை? இவரை பகவதம்சமென்றே சொல்ல வேண்டுமென்று இவருக்குப்பின் பீடத்தில் அமர்ந்த ஸ்ரீஜகதாசார்யாரவர்கள்

शिव एव भवानिति मे धिषणा । ह्युदपद्यत देशिक चेन्न तथा ।
सकलं जगदप्यवबुध्यति ते समतां सकलेष्वपि तत्तु कथम् ॥

என்ற சுலோகத்தில் சொல்லியிருக்கிறார்கள். இவர்களுடைய குருநாதரான ஸ்ரீ நரஸிம்ஹ பாரதீஸ்வாமிகள் இவர்களுக்கு ஸதாசிவப்ரஹ்மேந்திர ஸரஸ்வதியைப்போலுள்ள நிலையை யடைவாயென்று செய்த அனுக்ரஹம் வியர்த்தமாகுமா?

(தொடரும்...)

|| श्रीगणेशभुजङ्गम् ||

.. ஸ்ரீக³ணேஶபு⁴ஜங்க³ம் ..

उदश्चद्भुजावल्लरीदृश्यमूलो-
च्चलद्भ्रूलताविभ्रम भ्राजदक्षम् ।
मरुत्सुन्दरीचामरैः सेव्यमानं
गणाधीशमीशानसूनुं तमीडे ॥ ५ ॥

உத³ஶ்சத்³பு⁴ஜாவல்லரீ த்³ரு’ஶ்யமூலோ-
ச்சலத்³ப்⁴ரூலதாவிப்⁴ரம ப்⁴ராஜத³க்ஷம் |
மருத்ஸுந்த³ரீ சாமரைঃ ஸேவ்யமானம்’
க³ணாதீ⁴ஶமீஶானஸூனும்’ தமீடே³ ||5||

उदञ्चत् {உத³ஞ்சத்} = உயரக்கிளம்புகின்ற; भुजावल्लरी {பு⁴ஜாவல்லரீ} = புஜங்களாகிய கொடிகளின்; दृश्य {த்³ரு’ஶ்ய} = காட்சியினால்; भूलोच्चलत् {பூ⁴லோச்சலத்} = வேரிலிருந்து அசைகின்ற; भ्रूलताविभ्रम {ப்⁴ரூலதாவிப்⁴ரம} = புருவங்களாகிய கொடிகளின் சுழலில்; भ्राजदक्षम् {ப்⁴ராஜத³க்ஷம்} = விளங்குகின்ற கண்களை உடையவரும்; मरुत्सुन्दरी {மருத்ஸுந்த³ரீ} = தேவகன்னியர்களால்; चामरै: {சாமரை:} = சாமரங்களால்; सेव्यमानं {ஸேவ்யமானம்’} = ஸேவிக்கப்படுகின்றவரும்; गणाधीशं {க³ணாதீ⁴ஶம்’} = கணங்களுக்கு அதிபருமான; तं ईशानसूनुं {தம்’ ஈஶானஸூனும்’} = அந்த ஈசபுத்திரனை; ईडे {ஈடே³} = போற்றுகின்றேன்.

தாண்டவமூர்த்தியான கணேசன் தனது கொடி போன்ற கைகளை உயர்த்திக் கொண்டு காட்சியளிக்கின்றார். அம்மூர்த்தியின் தோற்றத்தைத்தானே கண்டு களித்து இன்பமடையும் பொழுது அவரது புருவங்கள் கொடிபோற் சுழலுகின்றன. அவைகளின் நடுவில் மருளும் அவரது கண்கள் மிகுந்த ஒளியுடன் விளங்குகின்றன. அப்பொழுது

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

தேவஸ்திரீகள் சாமரம் வீசித்தேவகுமாரனுக்குப் பணிவிடை புரிகின்றனர். இவ்வாறு காட்சி தரும் கணாதிபதியை யான் போற்றுகின்றேன்.

स्फुरन्निष्ठुरालोलपिङ्गाक्षितारं
कृपाकोमलोदारलीलावतारम् ।
फलाबिन्दुगं गीयते योगिवर्यै-
र्गणाधीशमीशानसूनुं तमीडे ॥ ६ ॥

ஸ்பு²ரநிஷ்டு²ராளோலபிங்கா³க்ஷிதாரம்’
க்ரு’பாகோமளோதா³ரளீலாவதாரம் |
ப²லாபி³ந்து³க³ம்’ கீ³யதே யோகி³வயை-
ர்க³ணாதீ⁴ஶமீஶானஸூனும்’ தமீடே³ ||6||

स्फुरन् {ஸ்பு²ரன்} = துடிக்கின்ற; निष्ठुर {நிஷ்டு²ர} = க்ரூரமாயும்; आलोल {ஆலோல} = சஞ்சல மாயும் உள்ள; पिङ्गाक्षि {பிங்கா³க்ஷி} = சிவந்த கண்களின்; तारम् {தாரம்} = கருவிழிகளை யுடையவரும்; कृपा {க்ரு’பா} = கருணையால்; कोमल {கோமள} = அழகியதும்; उदार {உதா³ர} = சிறந்ததுமான; लीलावतारम् {லீலாவதாரம்} = விளையாட்டவதாரங்களையுடைய வரும்; कलाबिन्दुगं {கலாபி³ந்து³க³ம்’} = பிந்து, கலை இவைகளால் அறியப்படும் ஜோதிஸ்வரூபமாக; योगिवर्यैः {யோகி³வர்யை:} = சிறந்த யோகிகளால்; गीयते {கீ³யதே} = துதிக்கப்படுகின்றார்; तं {தம்’} = அந்த; गणाधीशं {க³ணாதீ⁴ஶம்’} = கணபதியான; ईशानसूनुं {ஈஶானஸூனும்’} = சிவபெருமானின் திருக்குமாரனை; ईडे {ஈடே³} = போற்றுகின்றேன்.

பிரணவத்திலுள்ள பிந்து, கலை இவைகளில் ஜோதி ரூபமாய் விளங்குகின்றான். அவரது தேஜோமயமான ரூபத்தை அறிந்த யோகிகள் அவரைப் போற்றுகின்றனர். அங்ஙனம் யோகிகளால் மிகவும் சிரமப்பட்டுக் காணப்படும் கரி முகத்தோன் பலவிதமான லீலாவதாரங்களையெடுத்து பக்தர்களைக் காப்பாற்றுகின்றார். அரக்கர்களை அழிக்கக் கருதி உக்ரமான ரூபத்துடன் தோன்றும்பொழுது அவரது கண்கள் கருணையற்றவைகளாகக் காணப்படுகின்றன. அவைகள் சிவந்து துடிக்கின்றன. கருவிழிகளும் மிகவும் சுழல்கின்றன. இவ்வாறு தோன்றினும் அவரது அவதாரம் அவருக்குப் பக்தர்கள் பாலுள்ள ஒப்பற்ற கருணையையே காட்டுகின்றது. அப்படிப்பட்ட உக்ர விநாயகமூர்த்தியைப் போற்றுவதால் இன்னல்களனைத்தும் இழிவுறும் என்பது திண்ணம்.

(தொடரும்)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

||ஸிவபக்தி கல்பலதிகா||

ஶ்ரீ ஶ்ரீதர ஐயாவாள்

तिक्तग्रहोऽधिमधुरं मधुरग्रहोऽधि-तिक्तं यथा भुजगदष्टतनोस्तथाहम् ।

त्वय्यस्तरक्तिरितरत्र तु गाढमग्नः शोच्योऽश्मनोऽपि हि भवामि किमन्यदीश ||१४||

திக்தக்³ரஹோ(அ)தி⁴மது⁴ரம்’ மது⁴ரக்³ரஹோ(அ)தி⁴-திக்தம்’ யதா² பு⁴ஜக³த³ஷ்டதனோஸ்ததா²ஹம் |

த்வய்யஸ்தரக்திரிதரத்ர து கா³ட⁴மக்³ன: ஶோச்யோ(அ)ஶ்மனோ(அ)பி ஹி ப⁴வாமி கிமன்யதீ³ஶ ||14||

என்னை ஆளும் ஈசனே..! பாம்பினால் கடிபட்டவனுக்கு மிகவும் தித்திப்பானது மிகவும் கசப்பானதாகவும், மிகவும் கசப்பானது மிகவும் தித்திப்பானதாகவும் எப்படி உணரப்படுமோ; அப்படியே உம்மிடம் ஈடுபாடில்லாமல் மற்றவற்றில் மிகுந்த ஈடுபாடுள்ளவனாக நான் ஓட்டாஞ்சல்லி கல்லுக்கும் கீழானவனாக இரக்கத்திற்கு உரியவனாக ஆகிவிட்டேன். வேறுயென்ன உள்ளது..?

त्वत्संस्मृतित्वदभिधानसमीरणा..दि सम्भावनास्पदममी मम सन्तु शोकाः ।

मा सन्तु च त्वदनुषक्तिमुषः प्रहर्षाः मां त्वत्पुरःस्थितिपुषेश दृशानुपश्य ||१५||

த்வத்ஸம்’ஸ்ம்ரு’தித்வத³பி⁴தா⁴னஸமீரணாதி³ ஸம்பா⁴வனாஸ்பத³மமீ மம ஸந்து ஶோகா: .

மா ஸந்து ச த்வத³னுஷக்திமுஷ: ப்ரஹர்ஷா: மாம்’ த்வத்புர:ஸ்தி²திபுஷேஶ த்³ரு’ஶானுபஶ்ய ||15||

உம்முடைய பெயரை கூறுவதும், உம்முடைய பெயரை நினைப்பதும் முதலான நடைபெறுவதற்கு நல்ல வாய்ப்புக்களை ஏற்படுத்தும் வகையில் எனக்கு இந்த கலைகள் ஏற்படட்டும். ஈசனே..! உம்முடன் உள்ள இந்த தொடர்பு திருடுகிற (அதாவது துண்டிக்கிற) இனிய நிகழ்ச்சிகள் நேராதிருக்கட்டும். உம்முன் என்னை நிறுத்தி உம்முடைய அம்ருத பார்வையால் என்னை பார்த்து போஷனை செய்யும். (தொடரும்)



Voice of Jagadguru

advaitam paramanandam

an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

सन्ध्यावन्दनम्

ஸந்த்4யாவந்த3னம்

[சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் அருளிய விளக்கங்களுடன்]

ஸந்த்யாவந்தனம் செய்யும் வேளை:

நாம் ஸந்த்யாவந்தனத்தின் அமைப்பு என்ன என்று புரிந்து கொண்டுவிட்டோம். ஸந்த்யாவந்தனம் ஒரு கர்மா; அது அனுஷ்டிக்கப்பட மிகவும் சிறந்தது; அதைத் தினந்தோறும் அனுஷ்டிக்க வேண்டும் என்று முன்பே கூறப்பட்டது. எப்போது அனுஷ்டிக்க வேண்டும்? நாமத்தை (பகவானின் பெயரை) நாம் எவ்வாறு ஞாபகப்படுத்திக் கொள்கிறோமோ அவ்வாறு இடம், காலம் முதலிய நியமங்கள் ஸந்த்யாவந்தனத்திற்குக் கிடையாதா? அல்லது இடம், காலம் முதலிய நியமங்கள் அதற்கு உள்ளனவா? இவை குறித்து ஸந்த்யாவந்தனத்தை விதிக்கும் ஸ்ம்ருதி பின் வருமாறு கட்டளை இடுகின்றது.

सन्धौ सन्ध्यामुपासीत (योगियाज्ञवल्क्य ६.२५)

ஸந்தௌ4 ஸந்த்4யாமுபாஸீத (யோகி3யாஜ்ஞவல்க்ய **6.25)**

(ஸந்த்யையை ஸந்தியில் உபாஸிக்க வேண்டும்.)

आज्योतिषो दर्शनात् (सन्ध्या) (गौतमधर्मसूत्र १.२.१७)

ஆஜ்யோதிஷோ த3ர்ஶனாத் (ஸந்த்4யா) (கௌ3தமத4ர்மஸூத்ர **1.2.17)**

(ஜோதி தெரியும் வரை (ஸந்தி))

ஸூர்யன் மற்றும் நக்ஷத்திரங்கள் ஜோதிகளாக இங்கு குறிக்கப் பட்டிருக்கின்றன. காலையில் தினகரனின் கிரணங்கள் நம் கண்களை மலர்ச்சியுடன் தொடும் வரையிலும், மாலையில் இரவு நக்ஷத்திரங்கள் கண்களுக்குத் தென்பட்டு மகிழ்ச்சி உண்டாக்கும் வரை ஸந்த்யையை உபாஸிக்க வேண்டும். இவ்வளவு சொன்னால் மட்டும் நம் சந்தேகம் தீருவதில்லை. ஸந்த்யாவந்தனத்தை முடிக்கும் நேரம் தீர்மானமாகிவிட்டது. எப்பொழுது தொடங்குவது? இந்தச் சந்தேகத்தைத் தீர்ப்பதற்கு,

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

सज्योतिष्या ज्योतिषो दर्शनाद्वाग्यतः (गौतमधर्मसूत्र १.२.१७)

ஸஜ்யோதிஷ்யா ஜ்யோதிஷோ த³ர்ஶநாத்³வாக்³யத꞉ (கௌ³தமத⁴ர்மஸூத்ர 1.2.17)



"ஒரு ஜோதி இருக்கும்போது, மற்ற ஜோதி தெரியும் வரை பேச்சை அடக்கியவன் ஸந்த்யோபாஸனம் செய்ய வேண்டும்" என்று கௌதமர் கூறியிருக்கிறார். மேற்சொன்ன வகைகளில் அவர் அதைத் தொடங்கும் மற்றும் முடிக்கும் நேரங்களையும் தெரிவித்திருக்கிறார். (ஆதலால், முடிவு என்னவென்றால் காலையில் நக்ஷத்திரங்கள் உள்ளபோது ஸந்த்யா வந்தனத்தைத் தொடங்கவேண்டும். அருணோதயத்தின் போது அர்க்யத்தை விடவேண்டும். ஸூர்யன் தெரியும்போது முடிக்க வேண்டும். மாலையில் ஸூர்யன் தெரியும்போது தொடங்க வேண்டும். ஸூர்யன் தெரியாமல், நக்ஷத்திரங்கள் மட்டும் தெரியும்போது ஸந்தியாவந்தனத்தை முடிக்க வேண்டும்).

நமக்கு மேலும் ஒரு சந்தேகம் வருகிறது. "ஏதோ ஒரு கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஸந்த்யாவந்தனம் செய்யும் சரியான சமயத்தில் நமக்கு அவகாசம் கிடைக்கவில்லை. இந்நிலையில், ஸந்த்யாவந்தனத்தைச் செய்யாமலிருந்து விடலாமா?" என்பதே அது. சாஸ்த்ரத்தில்,

उत्तमा तारकोपेता मध्यमा लुप्ततारका ।
अधमा सूर्यसहिता प्रातः सन्ध्या त्रिधा मता ।।
(देवीभागवतपुराण ११.१६.४; विश्वामित्रस्मृति १.२२)

உத்தமா தாரகோபேதா மத்⁴யமா லுப்ததாரகா |
அத⁴மா ஸூர்யஸஹிதா ப்ராத꞉ ஸந்த்⁴யா த்ரிதா⁴ மதா ||
(தே³வீபா⁴க³வதபுராண 11.16.4; விஶ்வாமித்ரஸ்ம்ரு’தி 1.22)

(தொடரும்)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

श्रीमन्नारायणीयम्

ஸ்ரீமந்நாராயணீயம்

षष्ठं दशकम्

ஷஷ்ட²ம்’ த³ஶகம் விராட்புருஷநின் வடிவ வர்ணனை

त्वद् ब्रह्मरन्ध्र पदमीश्वर विश्वकन्द
छन्दांसि केशव घनस्तव केशपाशाः ।
उल्लासि चिल्लियुगलं द्रुहिणस्य गेहं
पक्ष्माणि रात्रिदिवसौ सविता च नेत्रे ॥ ४ ॥

த்வத்³ ப்³ரஹ்மரந்த்⁴ர பத³மீஶ்வர விஶ்வகந்த³
ச²ந்தா³ம்’ஸி கேஶவ க⁴னஸ்தவ கேஶபாஶா: |
உல்லாஸி சில்லியுக³ளம்’ து³ஹிணஸ்ய கே³ஹம்’
பக்ஷ்மாணி ராத்ரிதி³வஸௌ ஸவிதா ச நேத்ரே || 4 ||

உலகின் அடித்தளம் போன்ற குருவாயூரப்பா ! உமது பிரம்மரந்திரம் (உச்சி) வேதங்களானது. ஹே ப்ரபோ! உமது தலை மயிர் மேகங்களாகவும் , உம்முடைய அழகிய பிரகாசமான புருவங்கள் அந்த பிரம்மனுடைய மாளிகையாக விளங்குகிறது. இமைகளின் மயிர் இரவும் பகலும் என்று ஆனது. உம்முடைய கண்கள் சூரியன்என்று சொல்லப்படுகின்றது.

निः शेषविश्वरचना च कटाक्षमोक्षः
कर्णो दिशोऽश्वियुगलं तव नासिके द्वे ।
लोभत्रपे च भगवन्नधरोत्तरोष्ठौ
तारागणाश्च दशनाः शमनश्च दंष्ट्रा ॥ ५ ॥

நி: ஶேஷவிஶ்வரசனா ச கடாக்ஷமோக்ஷ:
கர்ணோ தி³ஶோ(அ)ஶ்வியுக³ளம்’ தவ நாஸிகே த்³வே |
லோப⁴த்ரபே ச ப⁴க³வன்னத⁴ரோத்தரோஷ்டௌ²
தாராக³ணாஶ்ச த³ஶனா: ஶமனஶ்ச த³ம்’ஷ்ட்ரா || 5 ||

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

An Unit of the e magazine Voice of Jagadguru)

பகவானே குருவாயூரப்பா ! உமது கடைக்கண் பார்வையே உலகனைத்தின் சிருஷ்டியாக விளங்குகிறது, உமது காதுகள் திசைகள் ஆகின, நாசித்வாரங்கள் அச்வினீ தேவதைகளாகவும், கீழுதடும் மேலுதடும் லோபமும் வெட்கமும் என்று மறுவியது, உமது ஒளி வீசும் பற்கள் நக்ஷத்ர கணங்களாக ஜொலிக்கின்றன, யமன் உம்முடைய தெற்றிப்பல் என்று சொல்லப்படுகின்றது.

माया विलासहसितं श्वसितं समीरो
जिह्वा जलं वचनमीश शकुन्तपंक्तिः ।
सिद्धादयः स्वरगणा मुखरन्ध्र-मग्नि-
र्देवा भुजाः स्तनयुगं तव धर्मदेवः || ६ ||
மாயா விளாஸஹஸிதம்’ ஶ்வஸிதம்’ ஸமீரோ
ஜிஹ்வா ஜலம்’ வசனமீஶ ஶகுந்தபங்க்திஃ |
ஸித்^{3}தா^{4}த^{3}யஃ ஸ்வரக^{3}ணா முக^{2}ரந்த்^{4}ர-மக்^{3}னி-
ர்தே^{3}வா பு^{4}ஜாஃ ஸ்தனயுக^{3}ம்’ தவ த^{4}ர்மதே^{3}வஃ || 6 ||

ப்ரபோ ! உமது புன்சிரிப்பு மாயை என்று ப்ரஸித்தி பெற்று விளங்குகிறது, மூச்சு வாயுவாக மாறியது, நாக்கோ ஜலம், வாக்கு பறவைக் கூட்டம் என்று விளங்குகிறத. ஸ்வரங்களின் தொகுதி ஸித்தர் முதலியவர்கள், வாய் அக்னியே என்றும், உமது வலிய கைகள் தேவர்களானார்கள், ஸ்தனங்கள் இரண்டும் தர்ம தேவன் என்று வேதம் சொல்கிறது.

Our Mail ID : Info@voiceofjagadguru.com

(தொடரும்...)

ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)
An Unit of the e magazine Voice of Jagadguru)

श्री रुद्रप्रश्नः

ஸ்ரீ ருத்³ரப்ரஶ்ன:

தியானம்

மகா கணபதியாகிய உமக்கு நமஸ்காரம். நீரே தேவகணங்களுக்குப் பதியாகியதால, கணபதி எனப் பெயர் பெற்ற உம்மைப் போற்றியழைக்கிறோம். நீர் மதிமான்களுக்குள் மதி மிக்கவர் என்று போற்றப் படுகிறீர்; ஒப்பற்ற புகழ்படைத்தவர் நீரே; ஒளி பொருந்தியவர்களிற் சிறந்தவரும், வேதத்திற்கு வேத நாயகராய் விளங்குபவரே! எங்களுடைய பிரார்த்தனைக்குச் செவிசாய்த்து உமது அருள் பொலிவுடன் உமக்குரிய ஆசனத்தில் இங்கு எழுந்தருள்வீராக! மகா கணபதியாகிய உமக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

சாந்தி பாடம்

ஸ்ரீ ருத்திரனை ஆராதிக்கும் எனக்குச் சித்திப்பனவாக இவ்வுலக இன்பமும் மேலுலக இன்பமும் பிரியமும் அதனால் ஏற்படும் ஆசையும் அவ்வாசையின் அனுபவமும் நன்மனம் படைத்த உற்றாரும் உண்டாகுக. மங்களமும் உயர் நலமும் நல்ல வாசஸ்தானமும் புகழும் ஸௌபாக்யமும் செல்வமும், வழிகாட்டும் ஆசாரியனும், தந்தை போன்று தாங்குபவனும், உடைமையின் ரக்ஷணமும், தைரியமும், எல்லோருடைய அனுகூலமும், போதனா சக்தியும் மக்களை ஏவும் திறமையும் பணியாட்களை நடத்துந்திறமையும் என்னிடம் வந்து சேருவதாகுக. மேழிச் செல்வமும், இடையூறுகளின் ஒழிவும், யாகம் முதலிய நற்கருமமும், அதன் புண்ணிய பலனும், நீடித்த க்ஷயம் முதலிய நோயின்மையும், குறுகிய ஜ்வரம் முதலிய நோயின்மையும், நோயற்ற வாழ்விற்குரிய மருந்தும், நீண்ட ஆயுளும், சிநேகிதரல்லாதாரில்லாமையும், பயமின்மையும், நன்னடக்கையும், நல்ல சயனமும், பகவத்ஸ்மரணையுடன் கூடிய விடியற்காலையும், யக்ஞம் தானம் அத்தியயனம் முதலிய பாவனமான காரியங்களுடன் கூடிய பகற்பொழுதும், என்னிடம் நிறைந்து இருப்பதாகுக. (பதவுரை சமகம் அனுவாகம் மூன்றில் பார்க்க.)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்